Registered as a News Paper at the G. P. O., Sri Lanka Under No. QB/8965/78

# ஐக்கியதீபம்


ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-60 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 15 |
| கடன் முறி ஐ. நா. ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |


மலர் : 35 (புதிய தொடர்) சித்திரை, 1980 இதழ் 9

# கூட்டுறவுச் சம்மேளனம் நிறுவப்பட வேண்டும்

## அமைச்சரிடம் கோரிக்கை

**1972ல் கூட்டுறவு இயக்கம் மறுசீரமைக்கப்படுவதற்கு முன்பு இயங்கி வந்த இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனமும் மாவட்ட சமாசங்களும் மீண்டும் நிறுவப்பட வேண்டும்.**

இவ்வாறு உணவு, கூட்டுறவு அமைச்சரைக் கோரும் மகஜரொன்றை ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை தயாரித்துள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட உபவிதித் திருத்தக் குழு விரைவில் குறித்த அமைச்சரைச் சந்தித்து உரையாடுவதற்கு ஒழுங்குகள் செய்யபட்டுள்ளன.

1979-ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற தேசிய கூட்டுறவுச்சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முன்பு இயங்கி வந்த இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் அதே பெயரில் அல்லது வேறு பெயருடன் மீண்டும் நிறுவப்பட வேண்டும் என்றும் உபவிதிகள் முன்னைய உபவிதிகளாக இருப்பதோடு, அவற்றில் இன்றைய தேவைகளுக்கேற்ப சில மாற்றங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் பலர் வற்புறுத்திப் பேசியதாகவும் பின்பு அது ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதாகவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட உபவிதி திருத்தக்குழு சம்மேளனமும் சமாசங்களும் அமைக்கப்படுவதற்கு முதற்படியாக அமைச்சரைச் சந்தித்து உபவிதி திருத்தங்களுக்கு அவரின் அனுமதியைப் பெறுவதென்று தீர்மானித்தது. அதற்கு அமையவே அக்குழு குறித்த மகஜரைத் தயாரித்து அமைச்சரைச் சந்திக்க ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் முன்னைய உபவிதிகள் இருக்கவேண்டும். அதே வேளையில் சம்மேளனம் தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு இன்றைய தேவைகளுக்கேற்ற பின்வரும் சில மாற்றங்கள் சேர்க்கப்பட வேண்டும் எனவும் அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

※ சம்மேளனம் தானாக அல்லது தன்னுடன் வேறு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்த்து நிதிகளைத் திரட்டி கைத்தொழில் துறைகளில் பெரு முயற்சிகளையும், காப்புறுதி உல்லாசப்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

# சிறந்த குசினி வேண்டும்

“ஒருநாளில் அரைவாசிக் காலம் அல்லது வாழ்நாளில் அரைவாசியையே குசினியிலே பெண்கள் செலவழிக்க வேண்டியிருப்பதால் குசினி சிறப்பாக அமைய வேண்டும். பெரிய வீட்டிலும் பார்க்க காற்றோட்டமான சகல வசதிகளும் கொண்ட ஒரு குசினி பெண்ணின் வேலைப் பழுவை வெகுவாகக் குறைக்கும். சிறந்த குசினி ஆண்களையும், சிறுவர்களையும் குசினி வேலையில் ஒத்துழைக்கக் கவர்ந்திழுக்கும்” இவ்வாறு திருமதி திசநாயக்கா தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மகளிர் குழுக் கல்வித் திட்டத்தின் கருத்தரங்கில் மாதிரிக் குசினி பற்றி விரித்துரைக்கையில் குறிப்பிட்டார்,

இதில் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பொதுக் காரியதரிசி திரு கி' அங்குணவெலவும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

திட்ட இயக்குநர் செல்வி ஜெயந்தா தென்னக்கோன் மலிவான முறையில் போஷாக்கு உணவைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை மகளிர் குழுவுக்கு விளக்கினார்கள்.

யாழ் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா பேசுகையில், கூட்டுறவு மகளிர் குழு சார்பில் நான் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவின்போது கங்கேரி நாட்டில் எமது சிநேகிதி ஒருவரின் வீட்டிற்குச் சென்றோம். எமது சிநேகிதி எமக்குத் தேனீர் தயாரிக்க எழுந்தபோது அவருடைய கணவர் தடுத்து நீங்கள் அவர்களுடன் கதையுங்கள், நான் தேனீர் தயாரித்து வருகிறேன் என்று கூறிச் சில நிமிடங்களில் தேனீருடன் சிற்றுண்டியும் எமக்குப் பரிமாறினார். கங்கேரியப் பெண்கள் சமூக சேவையிலும் நாட்டு முன்னேற்றத்திலும் கூடியளவு பங்கு கொள்வதற்கு ஆண்கள் வீட்டு வேலைகளில் பெண்களுடன் சேர்ந்து உழைப்பதே காரணம் என்று கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது: கங்கேரியில் ஒரு கூட்டுறவு யூனியன் கடையைப் பார்வையிட்டபோது தனது தொழிற்பரப்பிலுள்ள மக்களின் சகல தேவைகளையும் அது பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டமிட்டுச் செயற்படுவதைக் கண்டு பிரமிப்பு அடைந்தேன். அங்கு மக்களுக்குத் தேவையான அத்தனை பொருள்களும் மாடிக் கட்டிடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன, மக்கள் உற்பத்திப் பொருள்களையும், கைத்தொழில் பொருள்களையும் வாங்கிக் கொள்ளும் தாபனமாகவும் தாமே பொருள்களைத் தெரிவு செய்து எடுத்துச் சிட்டைபோடும் வகையிலும் அது இயங்குகின்றது. சலவைத் தொழிற்சாலை, வைத்தியசேவை, குழந்தைகளைப் பராபரிப்பது, வங்கி முதலிய சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதன்மூலம் மக்களுக்கு உதவுவதையே குறிக்கோளாகக்கொண்டு இயங்குகின்றன. இத்தகைய ஒரு கூட்டுறவு நிறுவனம் இலங்கையில் எப்போது அமையுமோ என அங்கலாய்க்கிறேன்.

தெல்லிப்பழை ப.நோ.கூ.ச தலைவர் திரு. சிவமகாராசாவும், மகளிர் குழுத் தலைவி திருமதி வேலுப்பிள்ளையும், கூட்டுறவுச் சபைப் பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார்கள்.

# அகில உலக கூட்டுறவுத் தினவிழா

அகில உலக கூட்டுறவு தின விழாவை மாவட்ட அடிப்படையில் எதிர்வரும் 26-7-80 சனிக்கிழமை கொண்டாட தேசிய கூட்டுறவுச் சபை யாழ்மாவட்டக் குழுவும், கூட்டுறவு இலாகாவும் தீர்மானித்துள்ளன. பாடசாலைப் பிள்ளைகளுக்கான பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகள், கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கான கட்டுரைப் போட்டி, பொதுமக்களுக்கான கவிதைப் போட்டி. கூட்டுறவுப் பொருட்காட்சியும், விற்பனையும், கூட்டுறவுச் சங்க அலங்கார மோட்டார் பவனி என்பன இதில் இடம்பெற உள்ளன. அன்று மாலை பகிரங்க பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். மேலும் விபரங்களைத் தங்கள் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்,

# தமிழ் நாட்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி

தமிழ் நாட்டின் தொழில்களில் கைத்தறித் தொழில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் உள்ள 35 63 இலட்சம் மொத்த கைத்தறிகளில் 5 56 இலட்சம் கைத்தறிகள் தமிழ் நாட்டில் இயங்கிவருகின்றன. பின்தங்கிய நிலையில் உள்ள கைத்தறித் தொழிலை முன்னேற்றி வைக்கும் எண்ணத்துடனும் கைத்தறித் தொழிலை நல்ல முறையில் சீரமைக்கும் நோக்கத்துடனும் சில தீவிர முன்னேற்றத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் நெசவாளர்களுக்குப் பயன்பட வேண்டுமெனில் அவர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதே சாலச் சிறந்தது என்பதை அரசு உணர்ந்து தமிழகத்திலுள்ள 60 சதவிகித நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## நெசவாளர் சங்கங்கள்

மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 44,720 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும் இவ்விரண்டு ஆண்டுகளில் 118 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொந்த தறிகள் இல்லாத கூலி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ்நாட்டில் 2 20 இலட்சம் தறிகளைக் கொண்ட 996 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. ஆறுவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மேலும் தனியார் துறை நெசவாளர்களை கூட்டுறவு சங்கங்களின் கீழ்கொண்டு வரப்படும்.

கூட்டுறவுத் துறையில் உற்பத்தி 1976—77-ல் ரூ. 38 கோடியாக இருந்ததை 1978—79-ல் ரூ. 45 கோடியளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப, விற்பனை 1976—77-ல் ரூ 42 கோடியாக இருந்தது, 1978—79-ல் ரூ 54 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மாநில அரசு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ரூ. 2,471 லட்சம் அளவிற்கு நிதியுதவி, கடன் மற்றும் மானியமாக அளித்துள்ளது 1976—77-ல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிசர்வ் வங்கி ரூ 9.27 கோடி அளவுக்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டது. 1978—79-ல் இது ரூ. 16 97 கோடி அளவிற்கு உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

400 விற்பனை நிலயங்களை நடத்தி வருகிறது. 1977-78 மற்றும் 1978—79-ல் மாநில சங்கத்திற்கு அரசு ரூ. 41.53 இலட்சம் அளவிற்கு நிதியுதவி அளித்து, ரிசர்வ் வங்கியின் நடைமுறை மூலதன கடன் உதவி 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 650 இலட்ச

### நூல் பதனிடும் ஆலை

இவ்வாலை நூல் மற்றும் கைத்தறி துணி பதனிடும் வேலைகளில் படிப்படியாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையை முழு அளவிற்கு பூர்த்தி செய்ய ரூ. 22 50 இலட்ச செலவில் வளர்ச்சித் திட்டங்

> கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுவரும் எமது கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதில் கூறப்பட்டுள்ள விபரங்கள் பயனுடையதாகும் - ஆ. ர்.

மாக இருந்ததை 1978—79-ல் ரூ 1200 இலட்சமாக உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

### நூற்பாலைகள்

கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வரும் நெசவாளர்களின் மூலப் பொ

களை வகுத்து செயல்படுத்தி வருகின்றது, 1976-ல் இவ்வாலையின் திறன் 10.81 இலட்சம் மீட்டர்களாக இருந்தது. இது 1978—79 ல் 28.87 இலட்சம் மீட்டர்களாக உயர்த்தப்பட்டுள்ளது, கடந்த

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிகிதம் வரை தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ—ஆப்டெக்ஸ்) கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. 1976—77-ல் கோ—ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 19.24 கோடியாக இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து 1978-79 ல் கோ—ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 34.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. விற்பனையைப் பெருக்க கோ—ஆப்டெக்ஸ் புது விற்பனை நிலையங்களைத் திறப்பதுடன் இயங்கிவரும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியும் வருகிறது. தமிழ் நாட்டிலும் இதர மாநிலங்களிலும் சுமார்

ருளான நூல் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தமிழக அரசு 12 கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவி இயக்கி வருகிறது. இந்நூற்பாலைகளின் மொத்த நிலுவை 2 30 இலட்சம் கதிர்களிலிருந்து 1978—79-ல் 3.05 இலட்சம் கதிர்களாக அதிகப்படுத்தியுள்ளது. தவிர இரண்டாண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் 4500 பேர் நூல் உற்பத்தி செய்ததை தற்பொழுது 8500 பேல் அளவுக்கு நூல் உற்பத்தி பெருக்கியுள்ளது 1976-ல் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த நூற்பாலைகள் 1978—79-ல் ரூ. 2.01 கோடி அளவிற்கு நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது.

2 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஒரு துணி அச்சிடும் பிரிவை அமைத்துள்ளது. சாராயச்சாலையை நவீன முறையில் விரிவுபடுத்தியுள்ளது. மேலும் சேலம், திருநெல்வேலி, கோயப்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் நவீன சாராயச்சாலைகள் ரூபா 60 இலட்சம் செலவில் நிறுவும் வேலையை மேற்கொண்டுள்ளது, இந்த 5 சாராயச்சாலைகள் தவிர வேலூரில் மற்றொரு நவீன சாராயச்சாலையும் நிறுவ தக்க நடவடிக்கைகளை ஈரோடு பதனிடும் ஆலை மேற்கொண்டுள்ளது. பாலிஸ்டர் போன்ற பருத்தியில்லா ரகங்களைப் பதனிட ஒரு பிரிவையும் ரூ. 31 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் ரூ, 2.13 கோடி நெசவாளர்களுக்கு கடனுக வழங்கியது 1976ல் ரூ, [illegible]8,87 இலட்சம் ஆக இருந்த விற்பனை 1978ல் ரூ. 193,07 இலட்சமாக அதிகரித்துள்ளது.

### தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக்கழகம்

தமிழ் நாட்டில் 4 கைத்தறி தீவிர வளர்ச்சி திட்டங்களும், 2 ஏற்றுமதி திட்டங்களும் காஞ்சிபுரம், ஈரோடு மதுரை, சேலம், கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் மொத்தம் 22,000 தறிகளைச் சேர்க்க இருப்பதில் 31-8—1979 முடிய 9,950 தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மொத்த திட்ட முதலீடு [illegible].464 20 இலட்சம் ஆகும் இத்திட்டங்களினால் கைத்தறி துணியின் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 75 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்விரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்திட்டங்களுக்கு அரசு ரூ. 270.25 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

### தொழிலியல் சங்கங்கள்

தறியில்லாத நெசவாளர்கள் அதிகமுள்ள இடங்களில் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது 4,700 கைத்தறிகளைக் கொண்ட 49 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் மாநிலத்தில் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 1,900 தறிகளைக் கொண்ட 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பட்டு நெசவு

நல்ல தரமான கோரா மற்றும் ஜரிகை குறைந்த விலையில் காஞ்சிபுரம் மற்றும் ஆரணியில் உள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாங்கி விநியோகிக்க கோ-ஆப்டெக்ஸ் தனி அதிகாரியைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இத்திட்டம் 15—8—1978 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த ஏற்பாட்டின் காரணமாக காஞ்சிபுரம் மற்றும் ஆரணியிலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக லாபகரமான முறையில் தரமான மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது,

### வடிவமைப்பு நிலையங்கள்

கைத்தறி நெசவாளர்களுக்கு புதுப்புது வடிவங்கள் உருவாக்கவும், ஆலோசனை வழங்கவும் மதுரை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் 3 வடிவமைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது போன்ற மேலும் 3 வடிவமைப்பு நிலையங்கள் மாநிலத்தின் இதர பகுதிகளில் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜனதா துணிகள்

குறைந்த விலையில் மக்களுக்கு கைத்தறித்துணிகள் வழங்க மொத்தம் 10,000 தறிகள் ஜனதா ரக உற்பத்தியில ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1977—78 மற்றும் 1978—79-ல் மொத்தம் 2..0 கோடி மீட்டர் ஜனதா துணிகளை இத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்து கோ—ஆப்டெக்ஸ் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 66,382 நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் ஈட்டுறுதித் தொகையை ரூ. 500-லிருந்து ரூ 3 000 ஆக உயர்த்துவது தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### சட்டப் பாதுகாப்பு

மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு நெசவாளர்களின் வேலை செய்யும் முறை, வேலைக்கு பாதுகாப்பு, சட்டப் பாதுகாப்பு முதலியவற்றை ஆராய்ந்து அதன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

(முற்றொடர்)

# கூட்டுறவு இயக்கத்தின் தனிப்பண்பு

பேராசிரியர் ஜோர்ஜெஸ் லசேர்
பாரிஷ் பல்கலைக்கழகம்

கூட்டுறவு சமூக மனச்சாட்சியின் அடித்தளமாக அமைந்திருப்பது கிறீஸ்தவ அறவொழுக்கமே. ''உங்களுக்கு ஒரு எஜமானே உண்டு. நீங்கள் எல்லோரும் சகோதரர் மத்திய காலத்திலே கூட்டுத்தானங்களிலும், தொழிற்கழகங்களிலும் இம்மனப்பான்மை நடைமுறைப்படுத்தப்பட்டு புரவலர்க்கு, வேலையாளர்களுக்கும், தொழில் பயில்வோருக்கும் இடையிலான உறவுகளை வரையறுத்தது.

ஆனால் இந்தக் கூட்டுத்தாபனங்களும் நப்புரிமை அனுபவித்தவர்களின் களங்களாக மாறிற்று; கத்தோலிக்க திருச்சபை ஆளும் வர்க்கத்தோடு இணைக்கப்பட்டு கிறீஸ்தவ சமூக ஒழுக்கத்தைப் புறக்கணிக்கத் தொடங்கிற்று,

அப்பொழுது இந்நிறுவனங்களின் இடத்தைத் தொழிலாளர்களின் சங்கங்கள் நிரப்பின; பழைய சமூக ஒழுக்கக் கருத்துக்களின் வாகனங்களாக அவை அமைந்தன.

சமயமூலங்களில் இருந்து ஊற்றெடுத்த இந்த ஒழுக்க முறை அம்மூலத்திலிருந்து விடுவிக்கப்பட்டு சமயச் சார்பை இழந்தது முதலில் இங்கிலாந்திலும் பின்னர் 18 ம் நூற்றாண்டு பிரான்சிலும் குடியாட்சி இலட்சியத்திற்கு இது தூண்டுகோலாய் அமைந்தது. இந்த ஜனநாயக இலட்சியம் இவ்வொழுக்கத்தின் அரசியல் துறை நடைமுறை எனலாம்.

பின்னர் கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளின் பின்னணியில் இந்த அறவொழுக்கம் தொழிலாளர் வர்க்கத்திடையே பரவி சோஷலிசத்தின் ஆரம்ப வடிவங்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இத்தகைய பகைப்புலத்திலேதான் கூட்டுறவு இயக்கம் பிறந்தது.

புத்த சமயத்தவரும், இஸ்லாமியரும் வேறு சமயத்தவரும் இந்த சமூகக் கோட்பாட்டை எளிதில் ஏற்றுக்கொள்கின்றனர் ஏனெனில் அவரவரின் நம்பிக்கைகளுக்கு மிகவும் அண்மித்திருப்பதால்.

(வளரும்)

(முற்றொடர்)

# மூன்றும் உலகில் இயற்கை அழிவுகள்--

உலக நாடுகள்சபை சேகரித்துள்ள புள்ளி விபரங்களின்படி இயற்கை அழிவுகள் 60 வளர்முக நாடுகளிலேதான் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்நாடுகளிலே பெரும்பாலானவை ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும்தான் உள்ளன. விவசாயமே அவற்றின் பிரதான பொருளாதார முயற்சியாகும்.

இயற்கை அழிவுகளுக்கு உட்பட வல்ல வளர்முக நாடுகளிலே, உலக நாடுகள் சபையின் கணிப்பீட்டின்படி இந்நாடுகளிலே இயற்கை அழிவுகளால் ஏற்படும் நட்டங்கள் அவற்றிற்கு வழங்கப்படும் உதவியிலும் பன்மடங்கு கூடுதலானவை. லத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரை 1960 க்கும் 74 க்கும் இடையிலே இயற்கை அழிவுகளால் ஏற்பட்ட இழப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியில் சராசரி 2.3வீத

**பிறுங் லோன்**

மெனக் கணிக்கப்பட்டுள்ளது. பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் பெரும்பாலானவை விவசாய உற்பத்தியில் ஈடுபட்டவையாகும் வேறு விதமாகக் கூறுவதானால் இந்த 2.3 வீத வருடாந்த இழப்பு பெரும்பாலும் விவசாயத் துறையையே பாதித்தது எனலாம்

ஆசிய பசுபிக் சமுத்திரப் பகுதி தொடர்பாக சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து 1961—74 வரை இயற்கை அழிவுகளால் ஏற்பட்ட மொத்த இழப்புக்கள் 3 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்கள் என (1974

# கூட்டுறவு இயக்கம் எவ்வாறு உதவலாம்?

சந்தை விலைகளின்படி) கணிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலேயுள்ள 32 வளர்முக நாடுகளிலே பெரும்பாலானவை மூலப் பொருள் உற்பத்தியாளரே.

சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் முழுமையுறுதவையாக இருப்பதால் இயற்கை அழிவுகளால் ஏற்பட்ட இழப்புக்கள் குறைத்து மதிப்பீடு செய்திருக்கலாம் என சில அவதானிகள் கருதுகின்றனர் இது எவ்வாறாயினும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டதுறை விவசாயத்துறையே, ஏறக்குறைய 20கோடி ஏக்கர் விளை நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பலத்த மதிப்பிட முடியாத நட்டத்திற்கு உட்பட்டனர்.

ஆபிரிக்காவின் சாகேல் பிரதேசத்தில் இயற்கை அழிவுகள் குறிப்பாக வரட்சி விவசாய அபிவிருத்திக்கு முக்கிய தடையாகக் கருதப்படுகின்றன.

அதேபோன்று கரிபியன் நாடுகளிலும், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வெள்ளம் விவசாய அபிவிருத்தியை வெகுவாகப் பாதிக்கும் முக்கிய காரணியாக இருக்கின்றது.

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படவல்ல வளர்முக நாடுகளிலே இயற்கை அழிவுகளின் பாதிப்புகள் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைகின்றன என உலகநாடுகள் சபை வல்லுநர்கள் கருதுகின்றனர்

இத்தகைய நிலைமையில் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு உதவலாம் என்பதை இனி பார்ப்போம்,

(வளரும்)

# சுவடுகள்

கரகரப்பிரியா

※

## அன்னை திரேசா - சுவாமி விவேகானந்தர்

அல்பேனிய நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்திய மண்ணின் இலட்சக் கணக்கான ஏழை மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துச் சேவை ஆற்றிவரும் அன்னை திரேசாவிற்கு கடந்த ஆண்டு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்ட செய்தி அனைவரும் அறிந்ததே.

அப்புனித அன்னையார் அண்மையில் பேட்டியின் பொருட்டு தன்னைச் சந்தித்த தமிழக பெண் எழுத்தாளர் ஒருவருடன் உரையாடும்போது அருள் ததும்ப பின்வருமாறு கூறினார்.

''சுயநலத்தோடு ஒவ்வொருவரும் வாழக் கற்றுக்கொண்டு விட்டோம மை சைல்ட். தேவைகளைக் குறைத்து ஆசைகளை அடக்கி வாழத் தொடங்கி விட்டோமானால் ஆஹா.. உலகம் எத்தனை சுபிட்சமாக இருக்கும் தெரியுமா? நம்மில எத்தனை பேர்களுக்கு அடுத்த வீட்டுக்காரனின் கஷ்ட நஷ்டங்களில பங்கெடுக்க மனது இருக்கிறது. அடுத்த வீட்டில் ஒரு குருடன் இருக்கலாம். அவனுக்கு அன்றாடம் ஒரு பத்து நிமிடம் பேப்பர் படித்துக் காட்டுவதன் மூலம் அவனை வெகுவாகச் சந்தோஷிக்கச் செய்யலாம் என்ற எண்ணம் எத்தனை பேருக்குத் தோன்றுகிறது.''

மற்றவனுக்குச் சேவை செய்வதற்குப பணமும் அந்தஸ்தும் தேவையில்லை. உன்னால் இயன்ற சிறிய சேவையைக் கூட அன்போடும், பணிவோடும் செய் அதுவே பெருஞ் சேவை என்ற கருத்து இதிலே தொனிக்கிறது.

அதே அர்த்தத்தில் சுவாமி விவேகானந்தர் ''ஒருவன் புகைப்பதற்காக அவனுக்குச் சுருட்டைச் சுற்றிக் கொடுத்தேனும் பணிவோடு அந்தச் சேவையைச் செய். பெரிய யாகங்கள் செய்வதால் ஏற்படும் பயன் அதற்கு உண்டு'' என்று அருளியுள்ளார்.

※

## துன்பத்திற்கு பேச்சும் காரணம்

தருமை ஆதீன செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் செல்வி நீலா, எம்.ஏ. அவர்கள் சில தினங்களாக யாழ்ப்பாணப் பகுதியில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

அருவி நளினமாக ஓடுவது போல இனிய இலகு தமிழில் அவரது சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

திருநாவுக்கரசு நாயனார் தருமசேனராக இருந்த போது தன்னைப் பிணித்த சூலைநோயைத் தீர்க்கும்படி சிவபெருமானை நோக்கிப் பாடிய ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்ற வரிக்கு கூற்றுவனாக வந்த இந்த நோயை விலக்கி அகற்றிவிடும் என்ற வழக்கமான கருத்தைக் கூறியபின் புதியஒரு கருத்தையும் பின்வருமாறு கூறி விளக்கினார். கூற்று என்றால் பேச்சு. நான பேசிய கீழ்த்தரமான பேச்சுக்கள்தான் இவ்வாறு நோயாக வந்தது, அதனை விலக்கியருளும் எனவே எமது துன்பங்களுக்கு நாம் பேசும் பேச்சுக்களும் காரணம்.

※

## காந்திஜியின் அகிம்சை

ஒரு முறை மகாத்மா காந்தியடிகள் பிரார்த்தனைக்காகத் தமது ஆசிரமத்தில் அமர்ந்திருக்கையில் அங்கு ஊர்ந்து வந்த ஒரு விஷப்பாம்பு அவரது உடம்பில் ஏறிச் சென்று தலைமீது சுற்றிக்கொண்டிருந்தது. இத்தனைக்கும் காந்திஜி அசையாது மௌனமாகவே இருந்தார.

அப்போது அங்கு வந்த தொண்டர்கள் மகாத்மாவின் தலையில் பாம்பைக் கண்டு பதட்டமடைந்தார்கள். காந்திஜி அவர்களை அமைதியாக இருக்கும்படி சைகை காட்டினார்.

அடுத்த நிமிடம் பாம்பு அவரது தலையிலிருந்து மெதுவாக இறங்கிச் சென்றது அப்போது அதனை அடிப்பதற்காக ஓடிய தொண்டர்களைக் காந்திஜி கண்டித்துத் தடுத்துவிட்டார்.

பின்பு தொண்டர்கள் அவரைப்பார்த்து, ''பாபுஜி உங்கள் மீது பாம்பு ஏறும்போது நீங்கள் ஏன் பேசாதிருந்தீர்கள்'' என்று கேட்டார்கள்.

அதற்கு மகாத்மா ''நான் அமர்ந்தது பிரார்த்தனைக்காக இறைவனின் ஆணையில்லாது ஒன்றுமே நடக்காது. பாம்பு என்னைக் கடிக்க வேண்டும் என்பது இறைவனின் ஆணையானால் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் அது என்னைக் கடித்தே தீரும். ஆனபடியால் பாம்பைக் கண்டு நான் ஏன் பதற வேண்டும். அந்தப் பாம்பு இப்போது எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையல்லவா ஒருவேளை அது என்னைக் கடித்தால்கூட அதனை அடிக்க உங்களை நான் அனுமதித்திருக்கமாட்டேன்'' என்று பதிலளித்தார்.

காந்திஜியின் அகிம்சை உள்ளத்தைக் கண்டு தொண்டர்கள் மனம் நெகிழ்ந்தார்கள்.

※

## கண்டறிவோம்

தமிழ் நாட்டில் தெய்வத்திருவுருவங்களைப் பஞ்சலோகங்களில் வார்க்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் வெற்றி கரமாக இயங்கி வருகின்றது.

வார்த்து மெருகிட்ட திருவுருவங்களை அச்சங்கத்தினர் தமது விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக அழகாக வைத்திருக்கிறார்கள்.

ஆலயத்தில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்ய விரும்புவோர் அலைச்சல், தாமதம் எதுவுமின்றித் தமக்கு வேண்டிய திருவுருவங்களை உடனடியாக வாங்கிக் கொள்ளலாம்.

அந்நிலையத்திலேயுள்ள திருவுருவங்களின் கலையழகையும் அவை அங்கு வைக்கப்பட்டிருக்கும் கண்கொள்ளாக் காட்சியையும் சுவைத்த தமிழறிஞர் கி. வா. ஜகநாதன் ''கண்டறியாதன கண்டேன்'' என்று ஒரு கவிதை புனைந்துள்ளார்.

கூட்டுறவில் இதுபோல் பல நல்ல விடயங்கள் நாம் கண்டறியாதனவாக இருக்கின்றன; அவற்றைக் காண்போமாக!

# மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

கூட்டுறவு இயக்கம் நூற்றுக்கு நூறு வீதம் மக்களின் இயக்கமாக இருக்கின்றபடியால் மக்களின் ஒத்துழைப்பும், நேர்மையான ஊக்குவிப்பும் கிடைத்தாலேயொழிய அதனை வளர்க்க முடியாது.

இவ்வாறு ஏழாலை தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் பொன் விழாவில் அதன் தலைவர் திரு பொ. சிவலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்

கூட்டுறவு இயக்கம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிந்துள்ளோம். எமது கிராம முன்னேற்றத்திற்கும். சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் பணியை ப. நோ. கூ. சங்கங்களிலும் உறுப்பினர்களாகஇருக்கும் நீங்கள் நன்கு அறிவீர்கள் என்று மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்,

குறித்த சங்கத்தை உருவாக்கியவரும் அதன் பொருளாளருமான திரு வி ஆர், முருகேசு பேசுகையில் சங்கத்தை ஆரம்பித்த காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களையும் அதன் வளர்ச்சியையும் விளக்கினார்

திரு. மு, இ. அல்பேர்ட் நன்றி தெரிவிக்கும்போது கடந்த ஐம்பது ஆண்டுகளாக எமது. சங்கத்தை வளர்த்து வந்த திரு வி. ஆர், முருகேசு அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பது மிகப் பொருத்தமானது என்று குறிப்பிட்டார்

பின்பு நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர்: திரு பொ. சிவலிங்கம், உபதலைவர்: திரு. ஆ. அந்தோனிமுத்து, செயலாளர்! திரு. க, விவேகானந்தன், உபசெயலாளர்! திரு மு சிவகுமாரு, தனதிகாரி: திரு. வி. ஆர் முருகேசு, நிருவாகசபை உறுப்பினர் திருவாளர்கள் அ. சிவஞானசுந்தரம், மு. இ. அல்பேர்ட்

# கைத்தொழில் சங்கங்கள் பற்றி கருத்தரங்கு

கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி அனைத்துலக கருத்தரங்கு ஒன்றினை நடத்துவதற்கு சுவீடின் கூட்டுறவு நிலையமும் போலிஷ் கூட்டுறவுச் சபையும் கூட்டாகத் திட்டமிட்டுள்ளன.

இக்கருத்தரங்கு மூன்று கட்டங்களாக நடைபெறும், முதலாவது கட்டம் இந்தியாவிலும் (பெங்களூர்) இரண்டாவது கட்டம் போலந்திலும், இறுதிக் கட்டம் சுவீடனிலும் நடைபெறும்

தென்கிழக்காசியாவில் கைத்தொழில் கூட்டுறவுச் சங்க இயக்கத்தின் வளர்ச்சியினை ஆராய்ந்து பலம், பலவீனத்தை இனம் காண்பதே முதல் கட்ட கருத்தரங்கின் நோக்கமாகும்.

(முற்றொடர்)

# பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுக் கொள்கைகளும்

போல்டெறிக்

கடந்த 80 ஆண்டுகளாக அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் மகாநாடுகளிலும், கூட்டங்களிலும் ஏகபோக உரிமைபற்றி அடிக்கடி பேசப்பட்டு வந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக 1951ல் கோப்பன்கேகனில் நடைபெற்ற 18 வது மகாநாட்டில் இணைப்பு நிறுவனத்தின் நெறியாளர் திரு. தோஸ்டன் ஒட்கே என்பவர் கூட்டுறவுச் சங்கங்களும் ஏகபோகங்களும் என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினைச் சமர்ப்பித்தார். 1880 களிலிருந்து பெரிய அனைத்துலகக் கம்பெனிகளின் வளர்ச்சியை எடுத்துக் கூறி அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்றப்பட்ட சட்ட நடவடிக்கைகளையும் அவர் விளக்கினார்; முற்றிலும் புதிதான பொருளாதார அமைப்புக்கு வேண்டிய அடிக்கல்லை கூட்டுறவு இயக்கம் தந்துதவத் தயாராக இருக்கின்றது என தனது அறிக்கையில் திரு. ஒட்கே கூறினார். இந்தப் புதிய அமைப்பில் சமுதாயத்தின் நன்மை கருதி ஆதாய நோக்கு கட்டுப்படுத்தப்பட்டுப் படிப்படியாகச் சேவைக் கொள்கையே பொருளாதார முயற்சிகளின் அடிப்படைக் கொள்கையாக அமையும் என அவர் சுட்டினார். இந்தக் கருத்து அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் பிரகடனத்தை எதிரொலித்தது. இப்பிரகடனத்திலே ஆதாயத்தைக் குறிக்கோளாக் கொண்ட அமைப்பிற்குப் பதிலாக முழு சமுதாயத்தினதும் நலவுரிமைகளைப் பேணும் கூட்டுறவு அமைப்பு உருவாகுவதற்கு உழைப்பதே இணைப்பு நிறுவனத்தின் குறிக்கோள் எனக் கூறப்பட்டிருத்தல் மனங்கொள்ளத்தக்கது.

நவீன உலகத்திலே மேற்கொள்ளப்பட வேண்டிய பெருமளவு பொருளாதார முயற்சிக்கு வழக்கமான கொம்பனிக்குப் பதிலாக கூட்டுறவு அமைப்பு முறையே ஈடாகவல்லது. அதுவே முக்கிய பதிலமைப்பாகவும் உள்ளது. அரசு கூட்டுத்தாபனங்கள்கூட பெரும்பாலும் சம்பிரதாயக் கொம்பனியைப்போன்றே அமைகின்றன. ஒரேயொரு வேறுபாடு சாதாரண பங்குகள் பொது நிறுவனங்கள் வசம் இருக்கின்றன.

இப்பின்னணியிலே பல்தேச வணிக கூட்டு நிறுவனத்தின் எதிர்காலம்பற்றி இப்பொழுது நடைபெறும் விவாதத்தில் கூட்டுறவு இயக்கம் ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்ய முடியும் என எதிர்பார்த்தல் நியாயமே.

சம்பிரதாயமான கம்பெனிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு அடிப்படைகளில் வேறுபடுகின்றன. முதலாவதாக பங்கு முதலுக்குச் செலுத்தப்படும் வட்டி மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. பங்குக்கு வட்டி என்று இல்லாது கூட்டுறவுச் சங்கத்தால் ஈட்டப்படும் மேலதிகப் பணம் வேறு வகையில் பங்கிடப்படுகின்றது: பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை கொள்வனவிற்கு ஏற்பவும் விளைபொருள் சந்தைப்படுத்துதல், சங்கங்களில் உறுப்பினர்கள் வழங்கிய விளைபொருள்களுக்கு ஏற்பவும் மேலதிகம் பங்கிடப்படுகின்றது கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களில் மிகையூதியமாக இம்மேலதிகம் பங்கிடப்படுகின்றது.

இரண்டாவது அடிப்படை வேறுபாடு என்னவெனில் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் வாக்குரிமை பங்குத்தொகை அளவிற்கேற்ப அமைவதில்லை எல்லோர்க்கும் சமவாக்குரிமையே உண்டு.

கூட்டுறவுக் கொள்கைகள் பற்றி அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் இணைப்புக் குழு சமர்ப்பித்த அறிக்கை 1966 ல் வியன்னாவில் நடைபெற்ற இணைப்பு நிறுவனத்தின் 23 வது மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது அவ்வறிக்கையில் 6 அடிப்படைக் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

இரண்டாவது கொள்கை சமவாக்குரிமையையும், குடியாட்சிப் பாங்கான கட்டுப்பாட்டையும் வற்புறுத்தியது. இதன்படி பங்குகளின் அளவு பொருட்படுத்தப்படக் கூடாது.

மூன்றாவது கொள்கை பங்கு முதலுக்கு வழங்கப்படும் வட்டி மட்டுப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்றும், நாலாவது கொள்கை மேலதிக பணத்தின் பங்கீட்டு அடிப்படை பற்றியும் அமைந்தன.

ஏனைய மூன்று கொள்கைகளில் முதலாவது கொள்கை தடையற்ற திறந்த உறுப்புரிமை பற்றியும், ஐந்தாவது கொள்கை கூட்டுறவுக் கல்வி பற்றியும், ஆறுவது கொள்கை கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒற்றுமை பற்றியும் அமைந்தன.

பல்தேச வணிகக் கூட்டுத்தபானங்களின்வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு கூட்டுறவுக் கொள்கைகளைப் பரந்த அடிப்படையில் கடைப்பிடித்தல் பொருந்துமா என வினவலாம். 1972-ல் நடைபெற்ற 25 வது மகாநாட்டில் இப்பொருள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையொன்று அங்கீகரிக்கப்பட்டது. கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களின் அடிப்படைக் குறைபாட்டிற்கு தீர்வுகாணலாம் என இக் கட்டுரை சுட்டிற்று.

(வளரும்)

---

(முற்றொடர்)

# ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க அமைப்புக்களை உருவாக்கல்

ஹான்ஸ் H. முன்கினர்

### ஆசியப் பிரதேசத்தில் ஒருங்கிணைப்பு குறித்து நிலவும் போக்குகள்

தனிப்பட்ட சிறு கிராமப்புறச் சங்கங்களோ அல்லது சற்று பெரிய ஆனால் தனிமையான சங்கங்களோ செயற்திறமையோ பொருட் பலமோ உடைய அலகுகளாக கருதப்பட முடியாதவை என்பது பொதுப்படையாக இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் மரபு வழியாக வந்த மூன்று அடுக்கு அமைப்பும் — ஆரம்பச் சங்கம். பிரதேச சமாசம், தேசிய உச்ச நிறுவனம்— எதிர்பார்த்த அளவு பலம் வாய்ந்ததாக இருப்பதில்லை என்பது புலனாகியுள்ளது. லெயிட்லோ அறிக்கை குறிப்பிடுவது போல இத்தகைய அமைப்பு பெரும்பாலும் ஒருமை பற்றிய ஒரு மாயையே தோற்றுவிக்கின்றது? பல தடவைகளிலே தேசிய உச்ச நிறுவனங்கள் அமைப்பு ரீதியாகவும், நிதி ரீதியாகவும் பலவீனமுற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பெரிய அடிப்படை அலகுகளை உருவாக்கும் போக்கு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பச் சங்கங்களையும், இரண்டாம் மட்டச் சங்கங்களையும் ஒருங்கிணைத்து எல்லைப்பரப்பு அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன அல்லது சிறு ஆரம்பச் சங்கங்களை ஒருங்கிணைத்து பெரிய ஆரம்பச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இப்போக்கிற்கு எடுத்துக்காட்டாக யப்பான், இலங்கை, ஈரான், இந்தோனேஷியாக அகிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

ஆரம்பச் சங்கத்தின் செம்மையான அளவை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் பெரும்பாலும் பொருளியல் சார்ந்தவையே. அவையாவன: தகுதி வாய்ந்த ஊழியரை வேலைக்கு அமர்த்தக் கூடிய வல்லமை; நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக் கூடிய வல்லமை; சகல உறுப்பினர்களுக்கும் தனது சேவைகளை எட்டவைக்கக் கூடிய வல்லமை.

சிறிய கிராமப்புறச் சங்கங்கள் ஒரு பெரிய ஆரம்பச் சங்கமாக ஒருங்கிணைக்கப்படுமிடத்து பழைய ஆரம்பச் சங்கங்கள் முற்றுகக் கலைக்கப்பட வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. பழைய ஆரம்பச் சங்கங்கள் புதிய கூட்டுறவுச் சங்கத்தின் சேவை நிலையங்களாகவோ கிளைகளாகவோ, பிரிவுகளாகவோ அல்லது சிறு உள்ளூர் குழுக்களாகவோ தொடர்ந்து பணியாற்றலாம்.

இரண்டு தட்டு அமைப்பைக் கொண்ட இத்தகைய கூட்டுறவு நிறுவன மாதிரியை அனைத்துலக தொழில் நிறுவனத்தின் கூட்டுறவுப் பிரிவு தயாரித்துள்ளது. இந்த மாதிரியின் படி, கிளை மட்டத்தில் உள்ளூர் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன; பொது மக்கள் பங்குபற்றுவதை இவை உறுதிப்படுத்துவதோடு பணியாளர்களின் ஆதிக்கத்தைத் தவிர்க்கும் முகமாக பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டதிகார முறையை இது செயற்படுத்துகின்றது.

கிளை மட்டத்தில் தனி உறுப்பினர்கள் கிளைக்கூட்டங்களில் பங்கு பற்றுகின்றனர்; இவர்களுடைய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் அவர்களுக்குச்சில அதிகாரங்கள் உண்டு. கிளை மட்டத்தில் நெறியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். சங்கத்தின் பொதுக்கூட்டங்களுக்கு கிளைகளின் பிரதிநிதிகள் சமுகமளிக்கின்றனர்.

கிளை மட்டத்தில் ஆற்றப்படும் பணிகள் வருமாறு: விளைபொருள்களைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், வழங்கீடுகளை விநியோகித்தல் கணக்குகளை வைத்தல்.

வழங்கப்பட்ட கடனை மேற்பார்வை செய்தல்! இவ்விடயத்தில் கிளையே கூட்டுப் பொறுப்பு வகிக்கும்.

மத்திய நிறுவனங்களின் ஆதரவுடன் உறுப்பினர் கல்வித் திட்டங்களை நடாத்துதல்

ஆரம்பச் சங்கம் ப.நோ. கூ. சங்கமாக அமைக்கப்படுகின்றது. இதன் வணிக முகாமை மையப்படுத்தப்பட்டிருக்கும். சந்தைப்படுத்துதல், வழங்கீடு, கடன் வசதி, ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் போன்றவை இவற்றின் பணிகளாகும். தகுதி வாய்ந்தவர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். இதுவே ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்கின்றது.

இந்த மாதிரி அமைப்பு பின்பற்றப்படுமிடத்து மரபுவழி வந்த நடுத்தட்டு (சமாச மட்டம்) மறையலாம். அப்பொழுது பெரிய ஆரம்பச் சங்கங்களுடன் தேசிய உச்ச நிறுவனங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்.

இத்தகைய ஒருங்கிணைப்பு மாதிரிகளை கூட்டுறவுச் சட்டங்களுடன் இணைப்பதன் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களை எளிதாக்கும் போக்கும் தென்படுகின்றது. எடுத்துக்காட்டாக பிலிப்பைன்சையும், ஈரானையும், தைலாந்தையும் குறிப்பிடலாம். (முற்றும்)

(முற்றொடர்)

# கூட்டுறவு முயற்சிகளில் முகாமை அபிவிருத்தி

தகவல்கள் எப்போதும் சிறந்தது என்றும், அவை சரியாகப் பயன்படுத்தப்படின் அவை நன்மை பயக்கும் என யாவராலும் நம்பப்படுகிறது. ஒழுங்கான பிரசுரங்களை வெளியிடும் பெருங் கூட்டுறவுகளில் உண்மைகளை வைத்து எழுதும்படி பத்திரிகை ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இது பத்திரிகையின் சத்தியத்தைப் பரப்பும் என்பது உறுதி.

முகாமை ரகசியமாயிருக்காவிடின் ஊழியர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அங்கத்தவர்களும் பங்குபற்றுவதில் ஆர்வம் காட்டுவார்கள். (பணிப்பாளர்களும், பிரதிநிதிகளும்) இது நம்பிக்கையை வளர்ப்பதோடு, அவர்களை யற்றவர்களுக்குச் செவிசாய்க்கவும் செய்யும். தமது நிறுவனம் தமக்குரியது என்ற எண்ணப்பாங்கை இது அங்கத்தவர்களுக்கு வழங்குமெனலாம்,

மேலும், தகவல்களை வழங்குவதாலேதான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கூறுவது தவறாகும். தகவல் வெளியிடப்படும் முறை, பிரச்சினைகளை உருவாக்குவதாய் இருக்கக்கூடாது ஆனால், பிரச்சினைகளைத் தீர்க்க உதவியாயிருக்க வேண்டும். பணிப்பாளர்கள், பிரதிநிதிகள், அங்கத்தவர்கள், ஊழியர்கள் யாவரும் தமது உள்ளீடுகளை அளித்து பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாயிருக்க வேண்டும்.

எந்தெந்த தகவல்கள், எல்லோராலும் பங்கிடப்பட வேண்டும் என்பதற்கு ஒரு வரையறை இருக்க வேண்டும், இது மிகவும் அவசியமாகும். மிகவும் ரகசியமான தகவல்கள் என்பது கூட்டுறவுகளிலிருந்து மாறுபடுகிறது. கூட்டுறவு முகாமைத் தத்துவமானது தகவல்கள் எல்லோராலும் பங்கிடப்பட வேண்டுமென கூறுகிறது. பல கூட்டுறவுகளில் முகாமைத் தத்துவங்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இது அங்கத்தவர்களின் விரோதத்தையும், அக்கறையுள்ள தலைமையையும் சம்பாதிக்கிறது,

## அபிலாசைகளின் முகாமை

தமது நிறுவனங்களுக்காக பல அபிலாசைகளை கூட்டுறவாளர்கள் வைத்திருக்கின்றனர். அங்கத்தவர்களினதும், சேவர்களினதும். விருப்பங்கள் ஒரே தன்மை உடையதாயிருந்து, அவை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென முகாமை கருதுகிறது. முகாமையாளர்கள் கூட்டுறவு வர்த்தகம் பற்றியே கவனமுடையவர்களாயிருக்கின்றனர். அப்படிப்பட்ட கருத்து அங்கத்தவர்களினதும் ஊழியர்களினதும் நிராசையை வளர்க்கிறது. இவர்கள் கூட்டுறவுகள் வேறு விதமானதாயிருக்கின்றன என நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், அவை ஏனைய வர்த்தக முயற்சிகளைப் போன்றே இருப்பதை உணர்கின்றபடியால் தாம் வஞ்சிக்கப்பட்டதாக எண்ணுகின்றனர். டிஸ்ரோச் (1976: 34) என்பவர் 1922-ம் ஆண்டில் சாள்ஸ் கைட் கூட்டுறவாளரின் கூட்டத்தில் பேசியதை எடுத்துக்காட்டுகிறார்.

''கூட்டுறவு ஒரு நட்சத்திரம் என நினைக்கின்றீர்களா? அப்படி நீங்கள் கருதுவதில்லையென மக்கள் கூறுகின்றனர். நான் முன்னர் கூறிய சில நன்மைகளை மட்டுமே கூட்டுறவிடமிருந்து எதிர்பார்க்கின்றனர் என்றும் வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை என்றும் கூறுகின்றனர். மேலும், ஏதாவது மாற்றங்கள் ஏற்படக்கூடும் என நினைப்போரை ஏதோ கற்பனையில் சஞ்சரிக்கின்றனர் என நினைக்கின்றனர். அது உண்மையானால், இது ஒரு ஆச்சரியமாக இருக்கலாம். ஏனெனில், இவை ஒரு மாயக் காட்சியாயிருக்கின்றன என்பதே இவர்களின் கருத்தாகும்.''

கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியாளர்களுக்கு ஆசைகள், அபிலாசைகள் இருந்து வந்திருக்கின்றன. கூட்டுறவுப் பொதுநலத்தை விரும்பியவர்களின் நோக்கங்கள் [illegible] குறிக்கோள்களினால் மாற்றப்பட்டுள்ளன, ஆனால், அவை இன்றும் பேராவலுடையதாகவே இருக்கின்றன. இருக்கும் பொருளாதார முறைகளை மனிதத் தன்மையுடையதாக்குவதே கூட்டுறவாளர்களின் நோக்கமாயிருக்கிறது.

அதாவது சகிக்க முடியாத சமுதாய, பொருளாதார அமைப்புகளுக்குப் பதிலாக சாதாரண மக்களின் நன்மைகளைப் பாராட்டும் நிறுவனங்களை நிறுவ வேண்டுமென்பதே. ஒரு தனிக் கூட்டுறவு இதைச் செய்ய முடியாது. அதனால் தான் அப்படிப்பட்ட அபிலாசைகள் தமது கட்டுப்பாட்டிற்கு மேலானதாக முகாமையாளர்கள் நினைக்கின்றனர். ஆனால், நாளடைவில் பெரும் மாறுதல்களைச் செய்யமுடியும்.

அதிகமான மக்கள் கல்வியறிவு உள்ளவராயிருக்கும் காலம் இது. தமது நுட்பங்களை வெளிக்காட்டக் கூடியவர்களாயிருக்கின்றனர். மேலும், தமது மனதில் தோன்றியதைக் கூறவும் சுதந்திரம் பெற்றவர்களாயிருக்கின்றனர் அபிலாசைகளுக்கான, முகாமைத் தத்துவம், இவற்றை இயங்கச் செய்வதானது அல்ல. ஆனால் சாதாரண மக்கள் தம் அபிலாசைகளைக் கூறி அவற்றைத் திட்டமாக்குவதே இதன் அபிவிருத்தி முறையாகும்.

கூட்டுறவுகள், தமது தத்துவம் மற்றும் தனிப்பட்ட அமைப்பு முறை மூலம் அங்கத்தவர்கள், முகாமையாளர்கள் ஊழியர்கள் ஆகியோரின் அபிலாட்சைகள் திருப்தியாக்கப்பட வேண்டுமென ஏற்றுக் கொள்கின்றன. சில அபிலாசைகளை நிறைவேற்ற முடிவதில்லை. ஆனால், பல அபிலாசைகள் நாளடைவில் நிறைவேறுகின்றன. இயக்கத்தின் அபிலாசைகளை முகாமைப்படுத்துவதில் கூட்டுறவு இயக்கம் அதி முக்கிய பாகத்தை எடுக்க வேண்டும். இவற்றை அதிகமான பங்குபற்றல், திட்டமிடுதல் செயல் முறைகளினால் நிறைவேற்ற முடியும்.

## திட்டமிடுதலும் பங்குபற்றலும்

திட்டமிடுதல் என்பது, ஒழுங்கான முறையில் தகவல்களைச் சேகரிக்கும் முறையாகும். மேலும், எப்படிப்பட்ட முயற்சிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதையும், தேர்ந்தெடுப்பதாலும் திட்டமிடுதல் முறையின் வெளியீடே திட்டமாகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்பட்ட தீர்மானங்களின் சுருக்கமே இதுவாகும்; ஒரு நிறுவனத்திற்கு இது அவ்வளவு முக்கியமானதாகும். ஆனால், உண்மையான திட்டமிடுதல் முறைக்கு இது முக்கியமானதல்ல.

ஒரு நிறுவனம் உருவாக்கப்படும்போது ஜனநாயக முறையிலான பங்குபற்றல் எதிர்காலத்திற்குத் தேவையானதாகவும், திட்டமிடுதலில் பங்குபற்றியும் இருக்கவேண்டும். ஒரு நிறுவனம், நிறுவப்பட்டு நிறுவனமாகியதும், பங்குபற்றல் வழக்கமாக எதிர்காலத்தைத் திட்டமிடுதலிலிருந்து கடந்த காலத்தில் நடைபெற்றதை பின்நோக்குவதிலேயே நிற்கிறது (பின்னோக்கி இருக்கிறது.) அங்கத்துவ அக்கறையின்மையை அபிவிருத்தி செய்வதில் ஜனநாயக முறையிலிருந்து மாறுதல் முக்கியமாயிருக்கிறது. பிரச்சினைகளை அன்வயம் செய்து, எதிர்காலத்திற்கான திட்டங்களை, கடந்த கால நிகழ்ச்சிகளை மீள்நோக்குதல், கடந்த கால முயற்சிகளை அங்கீகரித்தல், பிரதிநிதிகளுக்கு தீர்மானங்கள் எடுக்கும் உரிமையை அளித்தல் ஆகியன நமக்கு உற்சாகத்தை ஊட்டக் கூடியது அல்ல. ஜனநாயக முறைகள் சந்திக்க வேண்டிய ஒரு பொறியாகும் இது; ஆனால் இப்பொறியைத் திட்டமிடுதல் முறையில் பங்குபற்றுவதன் மூலம் முறித்தெறியலாம்.

சில நிறுவனங்கள் எதிர்வரும் நிகழ்ச்சிகளை எதிர்பார்ப்பதில்லை. ஆனால், அவை வரும்போது, அவற்றைச் சந்தித்து திருப்தி அடைகின்றன. அப்போது தீர்மானங்கள் வெகு விரைவில் எடுக்கப்பட வேண்டும். அந்த நேரத்தில் இத் தத்துவம் வகிப்போர் யாவருக்கும் அறிவிப்பது கஷ்டமாகும் ஒரு நிறுவனம் உயிருடன் இருப்பதற்கு அதன் சூழ்நிலையுடன் தொடர்பாயிருக்க வேண்டும். சூழ்நிலையை இதுவே உருவாக்குமானால், நிறுவனம் தப்பிப் பிழைக்குமாகும்; இதற்கு தகவல்கள் பெறப்பட வேண்டும். குறிக்கோள்கள் இருக்க வேண்டும். இக் குறிக்கோள்களை எய்க எந்த முறையான வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் தேர்ந்தெடுக்க வேண்டும். சுருக்கமாகக் கூறின் பல்வேறு குழுக்களும் எதிர்காலத்தில் எங்கே இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதும், அவற்றை அடைவதற்கான சிறந்த வழியைத் திட்டமிடுவதுமாம்.

ஒரு சில நிபுணர்களினால் அபிவிருத்தி செய்யப்படும் திட்டம் போதுமானதானால் கூட்டுறவில் திட்டமிடுவது அதிகமாகும். தேவைகள், அபிலாசைகளைக் கொண்ட எல்லா குழுக்களையும் திட்டமிடுவதில் சேர்த்துக் கொள்வது நல்லதாகும். எதிர்காலத்தைத் திட்டமிடுவது, எதிர்காலத்தை நோக்கும் முன்னேக்கிச் செல்லும் பாதையாகும்.

ஒரு நிறுவனத்தில் அதிகமானோர் பங்குபற்றும் போது, திட்டமிடுதல் சிக்கலானதாகும். எனினும், ஒரு நிறுவனம் எவ்வளவு பெரிதோ அவ்வளவுக்கு வளங்களும் அதிகமாயிருக்கும்; அங்கத்தவர்களின் குறிக்கோள்களும் நன்கு பூரணமாகும்; அதிகமானோரின் பங்கு பற்றலைக் கொண்டு, ஒரு நிலையை அன்வயம் செய்து குறிக்கோள்களை வைப்பது அங்கத்தவர்களை அதிகம் ஈடுபடச் செய்வதொன்றாகும்; இப்படிப்பட்ட ஈடுபாடு. திட்டங்களை அடைவதற்கு உதவியாயிருப்பதுடன் நன்மைகளையும் தரக்கூடும். அதேமாதிரியே மக்களைத் திட்டமிடுதல் முறையில் சேர்த்துக் கொள்ளாதுவிடின் ''நாம் — அவர்கள்'' என்ற பாகுபாட்டைக் கொண்டு வருவதோடு, அக்கறையின்மையையும் அதிகரிக்கும். இதுவே கூட்டுறவு முகாமையாளருக்குப் பெரும் சவாலாயிருக்கிறது.

## கூட்டுறவுகளிடையே கூட்டுறவு

கடந்த பத்தாண்டுகளில் இதுபற்றி எவ்வளவோ கூறப்பட்டும், எழுதப்பட்டும் இருக்கிறது. அப்படிப்பட்ட கூட்டுறவு நுகர்வோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் அதிக நன்மைகளை அளித்துள்ளது என்பதற்கான சான்றுகள் பல உண்டு எனினும் இதன் வளர்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது. எனவே அப்படிப்பட்ட அபிவிருத்திகளுக்கு, ஆழ்ந்த திட்டமிடுதல் அவசியமாகும். உண்மையான சர்வ-நிறுவன திட்டமிடுதலுக்கான முகாமை குறைவாயிருக்கிறது கூட்டுறவுப் பிரிவுகளுள், விளக்கமான திட்டமிடுதல் பொதுவானதல்ல. அதிகமான பிரேட்ட முகாமையாளர்கள், பல-தேசிய கூட்டுறவுகளின் வளங்களை அபிவிருத்தி செய்ய அதிக நேரத்தைச் செலவழிப்பதில்லை. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, கூட்டுறவுகளில் விளக்கமான திட்டமிடுதலுக்கு வசதிக் குறைவாயிருக்கிறது.

1. சந்தைப் பங்குகளுக்காக சில கூட்டுறவுகள், ஏனைய கூட்டுறவுகளுடன் போட்டி போடுகின்றன.
2. சுய பிரிவுகளின் மூலம் திட்டங்களை இணைப்பதற்கு முகாமை நுட்பக்குறைவு
3. அன்வயத்திற்குத் தேவையான பெருமள்வு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிபுணத்துவக் குறைவு.
4. பல்வேறு நிறுவனங்களிடையே பல தரங்களில் தகுதியின்மை. இதன் பயனாக தகுதியற்றவர்களாயிருக்கக் கூடும் என்ற பயம்.
5 புவியியல் தூரங்கள்.
6. பல்வேறு நிறுவனங்களிடையே பல்வேறு பிரச்சினைகள்.
7. ஒன்றுக்கு மேல் ஒன்றான அங்கத்துவமும் (அதாவது விவசாயிகள்) சமமான முதலீட்டுக்கான போட்டி.
8. தகவல்கள், விசுவாசம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு முயற்சிகளில்...

வசதியளிக்கும் கூட்டுறவு பிரமாண்டமான அமைப்புகளின் அபிவிருத்திக் குறைவு

9. கூட்டுறவுத் தலைவர்கள், கூட்டுறவு முகாமையாளர்கள் எதிர்காலத்தில் வரக்கூடியதை அறிய முடியாதிருத்தல்.

10. விசுவாசத்திற்கெதிரான சட்டங்கள்.

11. விளக்கமான திட்டமிடுதல் ஒரு நிறுவனத்தின் முகாமைக் கட்டுப்பாட்டையதிகரிக்கும் என்று பணிப்பாளர்கள் நினைத்துப் பயப்பிடல்.

இப்பிரச்சினைகள் வளர்ச்சியைத் தாமதம் செய்தாலும் பல நாடுகளில் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள சக்தி நெருக்கடி, போட்டியாளர்களில் விசேடமாக எண்ணைக் கம்பெனிகளில் எவ்வளவுக்கு விவசாயக் கூட்டுறவுகள் தங்கியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்நெருக்கடி விவசாய வழங்கல் கூட்டுறவுகளை ஒன்று சேர்த்தன. இவை ஒன்றுகச் சேர்ந்து பெற்றோலிய வளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் எனத் திட்டமிட்டனர். இதன் மூலம் போக்கு வரத்து வசதிகளைப் பயன்படுத்தத் திட்டங்கள் வகுத்னர். மிசிசிப்பி ஆறு வரை உரப்பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட படகுகளை, சந்தைக் கூட்டுறவுகளிலிருந்து தானியப் பொருட்களைக் கீழ்த் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்வதற்கு உபயோகப்படுத்தப்பட்டன. இவையெல்லாம் பிடிவாதமான வர்த்தகத் தீர்மானங்களெனினும், அமெரிக்க விவசாய பிரிவுள் ஒரு சிறந்த விளக்கமான திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதல் படியாகும்.

1973-ம் ஆண்டில் ஏற்பட்ட பணவீக்கத்தின் வீத அதிகரிப்பு, கனடிய கூட்டுறவுகளிலும் திகைப்பை ஏற்படுத்தியது. நுகர்வோன்கள் அதிகம் கச் செலவு செய்தல், நுகர்வோன் சேமிப்பைக் குறைத்ததுடன் கடன் தேவைகளையும் அதிகரித்தது. கடன் சமாசங்களில் ஏற்பட்ட நெருக்கடிகள் பல பிராந்திய சம்மேளனங்களைப் பொருளாதார நெருக்கடியில் ஆழ்ந்தியதோடு, இரு மாநிலங்களுக்கும், மத்திய மாநிலங்களுக்குமிடையே நிதிப் பரிமாற்றம் செய்யும் அவசியத்தை ஏற்படுத்தியது. ஏனைய பெருங் கூட்டுறவுகளுக்கு நீண்ட குறுகிய கால கடன்கள் தேவைப்பட்டன ஆனல் கூட்டுறவுப் பிரிவில் ஒரு விதமான நிதித் தட்டுப்பாடும் இருக்கவில்லை. ஆனல், நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை, இந்நிகழ்ச்சிகள் கனடிய கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தை உருவாக்கச் செய்தது. இப்பொழுது இது தேசிய மட்டத்தில் எல்லா நிதிகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறது.

ஐரோப்பிய கூட்டுறவுகளும சர்வ கூட்டுறவு, கோபபன்சும், என் ஏ. எப், சர்வதேச கூட்டுறவு காப்புறுதிச் சம்மேளனம், சர்வதேச கூட்டுறவு வங்கி போன்ற பல்—தேசிய கூட்டுறவுகளை அபிவிருத்தி செய்துள்ளது.

இம்முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், மேல் மட்டத்தில் மட்டுமே சிறிதளவு வேலை நடைபெற்றது. கூட்டுறவு வர்த்தக தொடர்புகளை அபிவிருத்தி செய்ய முகாமையாளர்கள் அதிக நேரத்தையும் ஊக்கத்தையும் மேற்கொண்டால், அங்கத்தவர்களுக்குக் குறிப்பிடத்தக்க நன்மைகளைச் செய்யலாம், உதாரணமாக, உலகத்திலுள்ள கைத்தொழில் நாடுகளிடையே வர்த்தகத்தில் கொண்டுவரப்படும் தானிய வகைகள் கூட்டுறவுகளினுல் சந்தைப்படுத்தப்படுகின்றன. கால்நடைகளுக்காகக் கொள்வனவு செய்யப்படும் உணவுப் பொருட்களும் கூட்டுறவுகளினல் சந்தைப்படுத்தப்படுகின்றன; எனினும், நான்கு முதலாளித்துவ வர்த்தகக் கம்பெனிகள். நுகர்வோர்கள் உற்பத்தியாளர்களுக்குத் தீமை செய்யும் வகையில் சர்வதேச வர்த்தகத்துறையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. கனடியன், அமெரிக்க கூட்டுறவுகள் எதற்காக ஐரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகளிலுள்ள கூட்டுறவுகளுக்குத் தானியங்களை வழங்கும் பொருட்டு. மினியாப்பொலிசில் உள்ள கார்கிள் குடும்பத்தைச் செல்வந்தராக்குகிறது.

## சொத்துக்களின் முகாமை

இந்த அம்சம் உண்மையான இயற்பொருள் வளங்களும் (மோட்டார் வாகனம, லொறிகள், இயந்திர வகை, கட்டடங்கள்), நிதிகளும் உட்பட கூட்டுறவுக்குள், நிதி முகாமை, நிறுவனத்தின் பங்குகளையும் வர்த்தகத்தில் கிடைக்கும் காசையும், கிடைக்கப்பட்ட மேலதிகங்களையும் கொண்டதாகும்,

பங்குகள் பல்வேறு வளங்களிலிருந்து வரக்கூடும். அங்கத்தவர்களிடமிருந்தோ அல்லது நீண்டகாலமாக ஒதுக்கப்பட்ட பணத்தின் மேலதிகத்திலிருந்தோ, வர்த்தகங்களின் மூலம் கிடைக்கப்பெறும் வருடாந்த லாபத்திலிருந்தோ கிடைக்கப்படலாம். பங்குகளை அளிக்கும் அதே மக்களே, வர்த்தகத்திலும் ஈடுபட்டிருப்பதால், கூட்டுறவு நிதி, மற்றும் நிறுவனங்களின் நிதியிலிருந்து வேறுபடுகிறது.

பங்குகளுக்குச் செலுத்தப்படும் வட்டி வரையறுக்கப்பட்டிருப்பதால், முதலாளித்துவ கூட்டுத்தாபனங்களிலும் பார்க்க கடனீட்டுப் பத்திரங்களுக்கு மிகவும் அண்மையில் இருக்கின்றன. இரண்டாவதாக இலாபம் திரும்பவும் பங்கீடு செய்யப்படுவதும் முதலீடு செய்யபபட்ட மூலதனத்தின்படி இல்லாமல் கடந்த நிதி வருடத்தின்போது ஒவ்வொரு அங்கத்தவரும் செய்துகொண்ட வர்த்தகத்தின்படியே சரிசம அளவினதாக இருக்கின்றது. இவ் வர்த்தகங்கள் வேலை மூலதனத்தையும், மொத்த இலாபத்தையும் கூட்டுறவுகளுக்கு அளிக்கின்றன. ஓரம் எவ்வளவுக்குப் பெரிதாக இருக்கிறதோ, அவ்வளவு பெரிதாகவே ஊதிய மு , அங்கத்தவர்களுக்கான தவணைப் பங்கும் அதிகமாயிருக்கும். முதலில் பெரும் தவணைப்பணங்கள், அங்கத்தவர்களினுல் செய்யப்படும் வர்த்தகங்களுக்கான மேலதிக செலுத்தலிலிருந்து கிடைக்கின்றன. பல ஆண்டுகளுக்கு அங்கத்தவர்களுக்கு இத்தவணைப் பணத்தைச் செலுத்தாது வைத்திருப்பதால், கூட்டுறவுகளுக்கு, பண வலிமை கிடைப்பதோடு, மிகவும் துரிதமாக வளர்ச்சியையும் பெறுகிறது முகாமை அங்கத்துவத் தோற்றத்திலிருந்து இது மிகவும் விரும்பத்தக்கதாகும். எனினும், வறிய விவசாயிகளுக்கும், ஊழியர்களுக்கும் சொந்தமாக செல்வந்த கூட்டுறவுகள் இருப்பது ஒரு கேலிச் செயலாகும்!

மேலதிக ஊதியமும் கூட்டுறவு முகாமைக்கு பிரச்சினைகளை அளிக்கின்றது எனலாம். இவை தனிப்பட்ட அடிப்படையில், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு செலுத்தப்படவேண்டுமா? ஒரு கூட்டுத் தரத்தில், சமூக சேவைகளை அபிவிருத்தி செய்ய உபயோகப்படுத்தப்பட வேண்டுமா? இது பற்றி பல விவாதங்கள் நடந்தேறியுள்ளன ஆனல் முடிவாக இவை ஒவ்வொரு கூட்டுறவுகளுக்கும் பொருத்தமான முறையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

நிதி வளங்களும், பயன்படுத்தலும் முகாமையில் மிகவும் முக்கியமான அம்சமாகும். அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு வளங்களை அபிவிருத்தி செய்ய ஒரு நிறுவனத்திற்குப் பெரும் மூலதனம் அவசியமாயிருக்கிறது. அனேக எழுத்தாளர்கள் கூட்டுறவு நிதி முகாமை பற்றிக் கூறியுள்ளனராகையால், நிதி நுட்பங்கள் பற்றி நான் இங்கு எடுத்துரைப்பது அனுவசியமாகும், சூழ்நிலைகளுக்கு ஒப்ப கூட்டுறவு முகாமை நிதிகள் வேறுபடுகின்றன.

'காஜா பொப்பியூலர்' அங்கத்தவர்களின் வைப்புகளை சேமிப்பாக எடுத்து நிதிகளை அங்கத்தவரின உரிமையுள்ள கைத்தொழில்களில் முதலீடு செய்து, வேலை வாய்ப்புகளை அளிக்கின்றது. கனடாவிலுள்ள நினைமோவில் கடன் வழங்கும் சமாசம் நிதிவளத்தை அளிப்பதோடு கணக்குச் சேவைகள், முகாமை வழிகாட்டிகள் ஆகியவற்றையும் வழங்கி நுகர்வோர் ஸ்டோர் சேவைகளையும் அபிவிருத்தி செய்கிறது. ஒரு நிறுவனத்தின் பொருளாதாரத்தைப் பொறுத்தே நிதி முகாமை இருக்க வேண்டும். ஆனல் அப்படிப்பட்ட முகாமைக்குப் பெரும் சமுதாய பயனும் உண்டு, இது அங்கத்தவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் உதவியாயிருக்கும்.

கூட்டுறவு முகாமையானது மற்றும் முகாமையிலிருந்து வேறுபடுகிறது என்பதைச்சுட்டிக் காட்டுவதே எனது குறிக்கோளாகும். கூட்டுறவு முகாமைத்தத்துவமானது நன்கு அபிவிருத்தி அடையாது இருப்பதால் இதில் அபிவிருத்தி அவசியமாகும். கூட்டுறவுகளின் தனித்தன்மையை முகாமையாளர் பலர் அறிந்து நான் குறிப்பிட்ட இடங்களுக்கான முகாமை நுட்பங்களை அபிவிருத்தி செய்துள்ளனர். ஆனல் துரதிஷ்டவசமாக, அவர்களுடைய அநுபவங்கள் சரிவரப் பகிர்ந்து கொள்ளப்படவில்லை எனலாம், அப்படி சேர்ந்திருப்பின் மற்றும் நாடுகளிலுள்ள முகாமையாளர்கள், இவர்களின் வெற்றி தோல்விகளிலிருந்து அனேகம் கற்றிருக்க முடியும்.

அங்கத்தவர்களைத் திரும்பவும் ஈடுபடச் செய்யும் வழி முறைகளை அபிவிருத்தி செய்வதையே நாம் சுட்டிக் காட்டுவேன். பழைய அமைபபுகளைக்கொண்டு வரவேண்டுமென்றோ, ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட பழைய முறைகளைக் கொண்டு வரவேண்டுமென்றோ நான் கூறவில்லை, உலகம் இப்போது மாறிவிட்டது, பெரும் நிறுவனங்கள் இப்போது நனவாகி விட்டன ஒவ்வொரு பக்கத்திலும் அவை மக்களை எதிர்க்கின்றன. எனவே, சிரேட்ட உத்தியோகத்தர்கள் வளங்களை நன்கு பயன்படுத்தி நிறுவன அமைப்புகள், முறைகளை அபிவிருத்தி செய்ய வேண் மென்பதை ஆதரிக்கிறேன். அங்கத்தவர்கள், ஊழியர்கள் யாவரினது தேவைகள், அபிலாசைகளுக்கேற்ற முறையில் கூட்டுறவு முகாமை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும், கடந்த முபப தாண்டுகளில் ஏற்பட்டுள்ள தொழில் நுட் , சமூக அபிவிருத்திகளுடன் ச் சவாலை ஏற்றுக்கொள்ள முடியும். கூட்டுறவுகளை ஒத்துணர்வுமிக்க முறையில் முகாமைப்படுத்த அவசியமான கற்பனசக்தியும், தீர்மானமும் எம்மிடம் இல்லாதிருக்கிறது.

1979ம் ஆண்டின் சர்வதேச கூட்டுறவு "றிவியூ" இதழ் 72, இல,1 இல் இருந்து எழுதப்பட்ட சுருக்கமாகும். இதை எழுதியவர் ஜோன் கிரேக்),

(முற்றும்)


## யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்திசெய்ய
நாடுங்கள் எமது விசேஷ கிளைகளை
(மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்)

*  *

சிக்கனமான செலவிற்கும்
தரமான அச்சு வேலைகளுக்கும்
யாழ். கூட்டுறவு அச்சகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 363

சுகமான வாழ்வுக்கு சிறந்த வைத்தியம்
யாழ் கூட்டுறவு வைத்தியசாலை
கண்டி வீதி, (சுண்டிக்குளி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 626

*  *

சகாய விலையில்
உலோகப் பொருட்கள். மட்பாண்டங்கள்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

திறமான தேயிலை, கட்டிப்பால்,
தூய்மையான சலவைக்கு
எம்டீஸ் சவர்க்காரம்.

குறைந்த செலவில்
அழகான ஆடைகள் அணிய நாடுங்கள்,
எமது தையல் நிலையம்

மற்றும் யாவுக்கும் நாடுங்கள்
எமது ஸ்தாபனத்தை
உங்கள் தேவையே எமது சேவை

முகவரி:
74/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 350

# கிராமியக் கொடுகடன்

## வரலாற்றுப் பின்னணியும் பிரச்சினைகளும்

ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளில் வாழும் உழவர் விவசாயிகள், ''நீர் மட்டம் கழுத்துவரை வந்திருக்கும்'' நிலைமையில் வாழ்வதாக பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஒரு பயிர்நாசம் அல்லது நோய் அவாகளை நீரில் முழுதாக அமிழ்த்திவிடும். ஆடும வட்டி வாங்குபவனுகச் சித்திரிக்கப்படும் கிராமக் கடன் கொடுப்போன்; கூடிய விலைகளில் அன்றாடப் பாவனைப் பொருட்களை விற்பனை செய்யும் கடைக்காரல; என்றும் கடன்பட்ட நிலையில் வாழும் விவசாயியின் இயலாமையைப் பயன்படுத்தி அவனைச் சுரண்டும் நிலச்சுவான்தார்; தமதுநாளாந்த நுகர்வுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கும், சாகுபடிச் செலவுகள், அவ்வப்போது எதிர்பாராவண்ணம் நேரிடும் செலவினங்கள் எல்பவற்றை ஈடு செய்வதற்கும் மாற்றுவழிகள் இல்லாது அல்லல்படும் கிராமிய விவசாய வாழ்க்கையின் பின்னணியில் இவர்கள் யாவரும் மிக முக்கியமானவர்கள்; ஒரு வகையில் இன்றியமையாதவர்கள்.

சிறிய நிலத்துண்டொன்றிலிருந்து கிடைக்கும் வருமானம் சாதாரண ஜீவனமொன்றுக்குப் போதியதாயில்லை. எனவே, அடித்தளம் பலவீனமானதாக இருப்பதால், விவசாயிகள் தமது தரித்திர நிலையிலிருந்து மீட்சி பெறுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஒருபுறத்தில், புதிய முறைகளையும், தேவையான உள்ளீடுகளையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான மூலதனம் அவர்களிடமில்லை. 'மரபுசார்ந்த' இந்தத் துறையில் வெளியீடு என்பது அவசியமாகவே நிலம், உழைப்பு என்பவற்றின் ஒரு கூட்டுக் கருமமாகவே இருக்கின்றது. 'நவீன' அல்லது 'கைத்தொழில்' துறைகளைப் போன்று மூலதனத்தை ஒன்று திரட்டும் செய்முறை இங்கு மிக அரிதாகவே காணப்படுகின்றது மறுபுறத்தில் பரீட்சார்த்த முயற்சிகளின் விளைவுகளில் காணப்படும் நிச்சயமின்மை, ஆபத்து என்பன காரணமாக, விவசாயிகள் மாறுதல்களுக்குப் பயந்து, நிச்சயமான (ஆனல் குறைந்த உற்பத்தி ஆற்றல் கொண்ட) பழைய முறைகளையே பின்பற்ற விரும்புகின்றனர். எனவே, வறுமையானது கிராமங்களில் வறுமையை மென்மேலும் வளர்க்கின்றது.

ஆனல், அடிக்கடி கேட்கப்பட்டுவரும் ஒரு கேள்விக்கு இது விடையளிக்கவில்லை. அதாவது, கிராம முன்னேற்றம் மிக மெதுவானதாக இருப்பதுடன், ஒப்பீட்டு ரீதியில் கிராமிய வறுமை தொடர்ந்தும் அதிகரித்து வருவது ஏன்? கிராமப் பிரதேசங்களில் வாழும் குறை வருமானப் பிரிவினரில் பெரும்பான்மையனோர் தமது ஜீவனேபாயத்துக்காக விவசாயத்திலேயே தங்கியிருக்கின்றனர். உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவும் தொழில் நுட்பம், சேவைகள் என்பவற்றை அவர்களால் பெற்றுக்கொள்ள முடிவதில்லை உற்பத்தி நடவடிக்கைகளின் நலன்கள் சமமாக பங்கீடு செய்யப்படுவதைத் தடுப்திலும், உள்ளீடுகள், சேவைகள், உற்பத்தியதிகரிப்புக்கு உதவும் நிறுவனங்கள் என்பவற்றை வறியோர் சென்றடையாதவாறு பார்த்துக் கொள்வதிலும் ஒரு சில நலன் பேணும் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, சந்தைப்படுத்தக் கூடிய உபரியைப் பெற்றுத்தராத அல்லது பிழைப்பு மட்டத்துக்கு கூடிய வருமானத்தை வழங்காத சிறு காணித்துண்டுகளை வைத்திருக்கும் கிராமிய உழவனின் துயரம் தோய்ந்த வாழ்க்கை, நமது உழவர் விவசாய அமைப்பின் ஒரு பிரதான அம்சமாகும். கடன் கொடுப்போர், கடைக்காரர், உற்பத்தியை மொத்தமாக கொள்வனவு செய்யும் வர்த்தகர், நிலச்சுவான்தார்; கடன்களையும், ஏனைய உள்ளீடுகளையும் வழங்கும் நிறுவன ரீதியான அமைப்புகள் பொருத்தமாகவும், திறமையாகவும் விருத்தி பெறுதிருத்தல், தாக்கமான விவசாயிகள் பேரணிகளின் குறைவு, அரசாங்க மற்றும் நிறுவன ரீதியான ஆவண ரீதியிலான கொடுகடன் என்பன வெல்லாம் இதன் ஏனைய அம்சங்களாகும்.

ஸ்ரீலங்காவின் கிராமியத்துறை அதன் கடன் தேவைகளுக்காக பாரம்பரியமாக நிறுவன ரீதியற்ற மூலங்களிலேயே தங்கியிருந்து வந்திருக்கின்றது தேவைகள் நேரிடும்போது விவசாயிக்கு உதவும் நண்பர், உறவினர், நிலச்சுவான்தார் என்போர் சில சந்தர்ப்பங்களில் வட்டியின்றியும், சில சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த வட்டி வீதத்திலும் கடன்களைக் கொடுத்து வருகின்றனர். பரஸ்பர நம்பிக்கையிலேயே இக்கடன்கள் வழங்கப்படுகின்றன; அதாவது, பிறிதொரு சந்தர்ப்பத்தில் கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவருக்கு கடனுதவிகளை வழங்குவார்; அல்லது வேறு வழிகளில்—அதாவது விவசாய நடவடிக்கைகளில் உதவுதல், வீட்டு வேலைகளைச் செய்தல் போன்றவற்றில்—உதவியாக இருப்பார்.

மத்திய வங்கி 1969ல் நடாத்திய கிராமியக் கொடுகடன், படுகடன் தன்மை பற்றிய ஆய்வின் போது வட்டி வீதங்கள் பற்றிய பல சுவாரஸ்யமான விஷயங்கள் கண்டறியப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் வருட வட்டி 175 சதவீதத்துக்கும் கூடுதலாக இருந்துள்ளது. ஆனல், சுமார் கால் பங்கு கடன்களுக்கே இந்த விதம் அறவிடப்பட்டுள்ளது. பெருந்தொகையான கடன்கள் வட்டியில்லாக் கடன்களாகவே இருந்தன. ஆனல், பண்டங்களாகக் கடன்கள் கைமாறும் போது மறைமுக வட்டி அறவிடப்படும் வாய்ப்புண்டு.

நிறுவன ரீதியற்ற கடன் மூலங்கள் விவசாயிகளைப் பொறுத்த வரையில் பல வகைகளில் பயனுடையதாகும். இந்த முறையில் பெரும்பாலும் பிணைகள் கோரப்படுவதில்லை; மேலும், திருப்பிச் செலுத்தும் கால அளவை கடனளியின் வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். படிவங்களைப் பூர்த்தி செய்தல், ஆவணங்களில் கையெழுத்து வைத்தல் போன்ற நீண்ட படிமுறைகள் இவ்வமைப்பில் இல்லை. நிறுவன ரீதியற்றகடன்துறை நுகர்வுத் தேவைகளுக்காகவும், கடன்களைக் கொடுக்கின்றது. எனவே, 'கேள்வி கேட்கப்படாத கடன்' என்று இது அழைக்கப்படுகின்றது.

வசதி, நெகிழ்ச்சித்தன்மை, இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்மை என்பன காரணமாக கிராமியத்துறை பெருமளவில் நிறுவன ரீதியற்ற கடன் அமைப்பிலேயே தங்கியிருக்கின்றது. நிறுவன ரீதியான கடன் வசதிகள் அதிகரிக்கப்பட்ட பின்னரும் கூட இத்தகைய வசதிகள் காரணமாக பெருந்தொகையான விவசாயிகள் நிறுவன ரீதியற்ற துறைகளிலிருந்தே கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதைப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன.

### கிராமியக் கடன் ஏன் அவசியமாகிறது?

குறைந்த வருமான மட்டங்கள், சேமிப்புக் குறைவு, விவசாயப் பொருளாதார மொன்றின் ஒழுங்கீனமான வருமானம் என்பவற்றின் விளைவாக கிராமியத் துறையின் சாதாரண நுகர்வுத் தேவைகளுக்காக கடன் தேவைப்படுகின்றது மேலும் மத வைபவங்கள், திடீர்ச் சுகவீனம், திருமணம் போன்ற குடும்பச் சடங்குகள், பயிர்நாசம் போன்றன நேரிடும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்காகச் செலவு செய்ய விவசாயிகளிடம் மேலதிக பணம் இருப்பதில்லை. இதனல் அவர்களது கடன்படு தன்மை மேலும் அதிகரிக்கின்றது

உற்பத்திச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்திருக்கும் புதிய தொழில் நுட்பங்கள் காரணமாக விவசாயத்திற்கான கடன் ஓர் அத்தியாவசிய அங்கமாக மாறியிருக்கின்றது. பாரம்பரியமாக விதைக்கப்பட்டு வரும் நெல்லினங்களை விடக் கூடிய விளைச்சல் தரும் புதுரக இனங்கள், செலவு கூடிய பசளை, களை கொல்லிகள் என்பன உள்ளீடுகளை வேண்டி நிற்கின்றன. டிராக்டர் போன்ற பண்ணை இயந்திரங்களுக்கும், உபகரணங்களுக்கும் நடுத்தர மூலதனம் தேவைப்படுகிறது. குழாய்க் கிணறுகள் போன்ற நீர்ப்பாசன விருத்திகளுக்காக நீண்டகால மூலதனம் தேவைப்படுகின்றது. எனவே, விவசாய நடைமுறைகள் நவீனமயமாக்கப்பட்டது, கிராமியத்துறைக்கான கொடுகடன் அளவு அதிகரிப்பதற்கான மிகப் பிரதான காரணம் என்று ஒருவர் கூறலாம். ஆனல், இவற்றுக்கு அப்பாலும் கிராமியக் கடன் அமைப்பு ஊடுருவிச் சென்றிருப்பது ஏன்; இவ்வினவுக்கான விடையைத் தேடும்பொருட்டு கிராமியக் கடன்படு தன்மையின் வேர்களை ஆராய்தல் முக்கியமானதாகும்.

பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட முன்னர் இலங்கையின் கிராமியச் சமூகங்களின் படுகடன் அளவுகளைப் பற்றி அறிந்துகொள்ளக் கூடிய சான்றுகளில்லை. எனினும், கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஓரிரு சான்றுகளின்படி, அக்காலத்தில் பண்டமாற்று முறையே முக்கியம் பெற்றிருந்ததை அறியமுடிகின்றது. எனவே இந்த பண்டமாற்று முறையில் கிராமத்தின் சமூக—பொருளாதார அமைப்பு ஓரளவு படுகடன் நிலையில் இருந்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகிறது. உலகின் பிரதான பொருளாதார நீரோட்டத்துடன் இலங்கை ஒருங்கிணைக்கப்பட்டதும் நாடெங்கிலும் வர்த்தகத் தொடர்புகள் உருவானதும் காரணமாக பெருந்தோட்டப் பொருளாதாரம் முக்கியத்துவம் பெற்று முன்னேற்றமடைய பாரம்பரிய கிராமப் பொருளாதாரம் பாதிப்புற்றது. சுயதேவைப் பூர்த்தியான பிழைப்பு மட்டப் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் படுகடன் நிலை வளர்ச்சியடையத் தொடங்கிற்று.

இலங்கையின் பாரம்பரிய சமூக—பொருளாதார அமைப்பு. அவ்வமைப்பில் வாழ்ந்த தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் உதவுவதாக இருந்தது. இது பரஸ்பர பொருளாதார நடவடிக்கைகளையும் உருவாக்கிற்று. இவ்வமைப்பு தகர்த்து விட்டதையடுத்து வர்த்தகவியலும், பணக் கொடுப்பனவுகளும் முக்கியம் பெறத் தொடங்கின. சிறு காணித்துண்டுகளை வைத்துக்கொண்டு விவசாயிகள் வறுமையில் உழன்று வந்த ஒரு பின்னணியில், துரிதமாக வளர்ச்சி பெற்றுவந்த நவீன வர்த்தகமானது, இலங்கையின் நாட்டுப்புறத்தில் மக்களின் கடன் சுமைகளைக் கூட்டியது.

சிறு விவசாயி, நிலக்குத்தகை அமைப்பு என்பவற்றின் பின்னணியிலேயே கிராமியப் படுகடன் பிரச்சினை நோக்கப்படுதல் வேண்டும். யோகரத்தினம், சிக்லர் ஆகியோரின் கணிப்புக்களின் பிரகாரம் இலங்கையின் சராசரி நெற்காணி உடமை 2 ஏக்கருக்கும் குறைவானதாகும். இந் நிலத்துண்டுகள் பொருளாதார ரீதியில் சிக்கனமான அலகுகளாக இல்லாதிருப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் நாட்டில்...

ஒரு சட்டம் தமிழக அரசால் சட்டப் பேரவையில் தாக்கல்செய்யப்பட்டு அது ஒரு சட்டசபைக் கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரல், தடையில்லாத நியுதல் உறுதியான மூலப்பொருள் விநியோகம்; துணிகளின் உற்பத்தியில் மாற்றம் செய்தல் பொலிஸ்டர் வகைத் துணிகள் அறிமுகம், ஜனதா ரக துணித் தேவை முழுவதும் உற்பத்தி செய்தல், அரசுத்துறைகளுக்குத் தேவையான துணிகளை வாங்குதல். உள்நாட்டு வெளிநாட்டு விற்பனைகளை அதிகப்படுத்தல் போன்றவைகளின் மூலம் கைத்தறிப் பிரிவின் துணி உற்பத்தியை அதிகரிப்பதோடு கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் கிடைக்கச் செய்யலாம்.

நன்றி கூட்டுறவு

# தேசீய கூட்டுறவுச் சபையின் உபவிதிகளைத் திருத்தல்

[தேசிய கூட்டுறவுச் சபையின் உபவிதிகளைத் திருத்தும் முகமாக நியமிக்கப்பட்ட உபகுழு தயாரித்த அறிக்கையை இங்கு தருகின்றோம். இந்த அறிக்கை கூட்டுறவு உணவு அமைச்சருக்கு 9-5-80-ல் கையளிக்கப்பட்டது.—ஆ-ர்.]

அறிமுகம்

25-5-79'ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேசிய கூட்டுறவுச் சபையின் உபவிதிகள் இன்றைய தேவைகளுக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாவட்ட பிரதிநிதிகள் பெரும்பாலோர் 1972 ல் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பிற்கு முன்பு இருந்தது போன்று கூட்டுறவுச் சம்மேளனமும், கூட்டுறவு மாவட்ட சமாசங்களும் மீண்டும் நிறுவப்பட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தனர்.

உபவிதி திருத்தத்தை ஆராய்வதற்கென பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட உபகுழு கூட்டுறவுச் சம்மேளனமும், கூட்டுறவு மாவட்ட சமாசங்களும் மீண்டும் நிறுவப்பட வேண்டுமென முடிவு செய்தது, இதற்கு முதற்படியாக கௌரவ அமைச்சருடன் உரையாடி அவருடைய அங்கீகாரத்தைப் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## 1972 ல் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பிற்கு முன்பு இருந்த நிலை

அப்பொழுது இருந்த உச்ச கூட்டுறவு நிறுவனம் கூட்டுறவுச் சம்மேளனமாகும். இது 21, மே, 1955ல் நிறுவப்பட்டது. இலங்கையிலுள்ள 24 கூட்டுறவு மாவட்டங்களிலே நிறுவப்பட்ட 24 கூட்டுறவு மாவட்டங்களை உறுப்பினராகக் கொண்டு கூட்டுறவுச் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. கூட்டுறவுச் சம்மேளனமும், கூட்டுறவு மாவட்டச் சமாசங்களும் சுதந்திரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களாக விளங்கின. பல்வேறு மாவட்டங்களில் தொழிற்பட்டு வந்த ஆரம்பச் சங்கங்களும் இரண்டாம் மட்ட கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவு மாவட்ட சமாசங்களில் உறுப்புரிமையைப் பெற்றிருந்தன. இவை அங்கத்துவ சங்கங்களுக்கான கல்வி, பிரசார விரிவாக்க வேலைகளை மேற்கொண்டன. அப்பொழுது கூட்டுறவுச்சம்மேளனம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு மாவட்ட சமாசங்களுக்கு உதவிசெய்ததே ஒழிய சமாசங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கும் அதிகாரத்துவ நிறுவனமாக இயங்கவில்லை.

அங்கத்துவ சங்கங்களிடமிருந்து கூட்டுறவு மாவட்ட சமாசங்கள் நிதிகளை அறவிட்டு அவற்றினை நிருவகித்தன.

## மறுசீரமைப்பிற்குப் பின்னர்

ஜூன் 26-ந் திகதி 1972 வரை இருந்த கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பிலே மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஜூலை 16-ந் திகதி 1972ல் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்துடன் 24 கூட்டுறவு மாவட்ட சமாசங்களும் இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனமும் ஒன்றிணைக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் விளைவாக கூட்டுறவுச் சம்மேளனம் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் தலைமை அலுவலகமாக மாறியதுடன் மாவட்ட சமாசங்கள் தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் குழுக்களாக மாற்றம் பெற்றன.

கூட்டுறவாளருடைய வேண்டுகோளுக்கேற்ப இந்த மாற்றம் நடைபெறவில்லை. அக்காலத்திலே அதிகார பீடத்திலே அமர்ந்தவர்களின் திணிப்பாகவே இது இருந்தது.

இன்றைய அமைப்பிலே ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பங்கு வருமாறு: கூட்டுறவுக் கல்வி, பிரசார விரிவாக்கல் வேலைகளைச் செய்தலும் அனைத்துலக கூட்டுறவு தொடர்புகளை மேற்கொள்ளலும், கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கும், ஆலோசனைகளுக்கும் ஏற்ப இந்த நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட சபைகளுக்கு கூட்டுறவு மாவட்ட சமாசங்களுக்கு இருந்த அதிகாரங்கள் இல்லை. ஆலோசகர்களாகவே இவை சேவை ஆற்றுகின்றன,

இன்றைய ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை தனது செலவினங்களை ஈடுசெய்வதற்கு வேண்டிய நிதிகளை கூட்டுறவு ஆக்க ஆணையாளரிடமிருந்தே பெறவேண்டியிருக்கிறது.

நிதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கூட்டுறவுச் சம்மேளனத்துக்கும் கூட்டுறவு மாவட்ட சமாசங்களுக்கும் இருந்த சுதந்திரம் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபைக்கு இல்லை.

இன்றைய அமைப்பினை மாற்ற வேண்டும் என்பதற்கான காரணங்களை அடுத்த இதழில் ஆராய்வோம்.

(வளரும்)





"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப் வாங்கி உபயோகியுங்கள்.

நீலம், வெள்ளை பார் சோப்புக்கள்

பெரிய அளவிலும் சிறிய அளவிலும் விற்பனையாகின்றன.

பெரிய பார் சோப் 6/— சிறிய பார் சோப் 3/—

மேலுறைகளை அனுப்பி பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"மில்க்வைற் — யாழ்ப்பாணம்."


## தேவை
### தொழிலாளி

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை யாழ் மாவட்டக் கிளையில் பணியாற்றுவதற்கு நிரந்தர தொழிலாளி ஒருவர் தேவை.

தகமைகள் :—

1. வயது: 20-க்கும் 30-க்கும் இடைப்பட்டவர்.
2. க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி எய்தியவர்.

மின்தூக்கி இயக்க அனுபவம், மின்சார வேலை, பொறி திருத்தவேலை அனுபவம் உடையவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

சம்பள விகிதம் :—

$$\frac{150 \;—\; 212}{5 \times 10 - 6 \times 2}$$

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வேறு படிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பம் :—

மேற் குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய முறையில் தாங்களே தயாரித்த விண்ணப்பப் படிவ மூலம் இதற்கான விண்ணப்பங்களை, செயலாளர், ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை, 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 28–6–1980**

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

# கிராமியக்

பதால் ஒரு குடும்பத்துக்குப் போதிய வருமானத்தை அவை பெற்றுக்கொடுப்பதில்லை. சில இடங்களில் குறிப்பிட்ட சில பண்ணை நிலங்களின் அளவு விஸ்தரிப்படைந்து செல்லும் அதேவேளையில் வேறு பண்ணை நிலங்கள் மென்மேலும் குறுகி வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் படிமுறை இரு முகப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அதாவது ஒருபுறத்தில் நிலவுடைமைவாதம் தலை தூக்கும் போது மறுபுறத்தில் பெருந்தொகையான நிலமற்ற தொழிலாளர் உருவாகி வருகின்றனர். உழவுசாயிகள் தொடர்ந்தும் கடன் வலையில் சிக்குவது ஏன் என்பது குறித்து பல ஆய்வுகள் எழுப்பிய வினாவுக்கு இது விடை தருகின்றது.

1936 க்கும் 1948 க்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கிராமிய பொருளாதார நிலை குறித்த பல ஆய்வுகள், கிராமியத் துறையில் கடன்சுமை அதிகரித்திருப்பதாகவும், கூடிய வட்டி வீதங்கள் அறவிடப்படுவதாகவும் எடுத்துக் காட்டின. கொரியச் செழிப்பு நிலைமையின் போது 1950–51 காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு ஆய்வு, நிலைமை ஓரளவுக்கு விருத்தி பெற்றிருப்பதைக் காட்டியது. ஆனால் கிராமியத்துறையின் கடன் நிலைமைகள் பற்றி சரியான முறையில் தரவுகளைத் திரட்டி மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு 1957ல் குடிசனக் கணிப்பீட்டுப் புள்ளி விவரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கிராமக் குடும்பங்களில் 54 சதவீதமும், விவசாயக் குடும்பங்களில் 60 சத வீதமும் கடன்பட்ட நிலையில் இருப்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டியது.

(வளரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவுச் சம்மேளனம்...

பிரயாண விடுதிகள் ஆகியவற்றையும் ஆரம்பிக்க வேண்டும்.

❋ கூட்டுறவு ஊழியர் சேமலாபநிதியை நிறுவி எல்லாச் சங்கங்களது ஊழியர்களின் சேமலாப நிதிகளைச் சேகரித்து நடாத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

❋ பிறநாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுடன் வியாபாரத் தொடர்புகளை வைத்து நடாத்த வேண்டும்.

❋ பல்கலைக் கழக மட்டத்தில் ஒரு கூட்டுறவுக் கல்வி நிலையத்தை நிறுவி நிருவகிக்க வேண்டும்

யா. ப. நோ. கூ. ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 341-79
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No: QB/8965/78